**அ.வ.எண்: 5/2019** **நாள்: 19.06.2025**

வா.சா.2 - மாயன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. எனக்கு தற்போது 54 வயது. நான் வழக்கறிஞரா என்றால் சட்டம் படித்துள்ளேன். பயிற்சி செய்யவில்லை. நான் வழக்கறிஞர் என்ற முறையில் பல்வேறு அலுவலகத்திற்கு எடுத்துரைப்பதற்காக செல்வேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிக்கு நான் மாமன் மகன் என்றால் மைத்துனர் ஆவேன். என்னுடைய சகோதரியை தான் 1ம் பிரதிவாதி திருமணம் செய்துள்ளார். 1ம் பிரதிவாதி, வாதிகள் மற்றும் நான் எல்லோரும் சேர்ந்து தான் தாவா வழக்கை தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. தாவா வழக்கில் வாதிக்கு ஆதரவாக அனைத்து செயல்களையும் நான் கவனித்துக் கொள்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே வாதி முத்துலெட்சுமியை தூண்டிவிட்டு 2ம் பிரதிவாதியின் மீது தேவகோட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா மாறுதலுக்காக மனு செய்துள்ளேனா என்றால் சரியல்ல, 2ம் வாதிக்கு அவர் தந்தை கிரையம் கொடுத்த சொத்தை 2ம் பிரதிவாதி சட்ட விரோதமாக பட்டா மாறுதல் செய்துள்ளார். அதன் சர்வே எண் திருவேகம் புத்தூர் குரூப் புல எண் 261/6 1 ஏக்கர் 1 சென்ட் ஆகும்.

2. தேவகோட்டை RDO நீதிமன்றத்தில் மேற்படி முத்துலெட்சுமி தாக்கல் செய்த மனு விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். முத்துலெட்சுமிக்கு கணவர் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். முத்துலெட்சுமி RDO நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் வில்லங்க சான்றிதழையும் சேர்த்து தாக்கல் செய்துள்ளாரா என்றால் தெரியாது. நான் கருப்பையா மகன் மாயன் ஆவேன். RDO நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வில்லங்க மனுவை நான் தான் வாங்கியுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. (வில்லங்க சான்றிதழ் சாட்சியிடம் காட்டப்பட்டது, சாட்சி இது அசல் ஆவணம் அல்ல. இது வழக்கிற்கு சம்மந்தமல்ல என்று கூறினார்.) RDO வில் நடக்கும் வழக்கை நான் தயார் செய்து முத்துலெட்சுமியை தூண்டிவிட்டு நானே வில்லங்க சான்றிதழ் பெற்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

3. திருவேகம் புத்தூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 41/2017ல் எண்ணில் சாந்தி என்பவர் 2ம் பிரதிவாதியின் மீதும் அவர் குடும்பத்தார் மீது ஒரு குற்ற புகார்

கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி குற்ற வழக்கிலும் 2ம் பிரதிவாதிக்கு எதிராக நான் தான பட்டியல் சாட்சி எண் 2 ஆக சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு 1, 2 பிரதிவாதிகள் பெயரில் தனித்தனியாக பட்டா உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் குறித்து புல எண், பரப்பளவு, நான்குமால் ஆகியவை குறித்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 2ம் வாதி பெயரில் உள்ள சொத்தை 2ம் வாதியும், 1, 2 பிரதிவாதி பெயரில் உள்ள சொத்தை 1, 2 பிரதிவாதிகளும் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள். வாதியும் பிரதிவாதிகளும் அவர் அவர் பெயரில் பட்டா இஇருக்கும் சொத்திற்கு வேளாண் காப்பீட்டு செய்துள்ளனர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

4. 2ம் பிரதிவாதியின் தகப்பனார் ஏற்கனவே 2ம் பிரதிவாதிக்கு ஒரு சொத்து கிரையம் எழுதி வைத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு சர்வே எண் குறிப்பிட்டு சொன்னால் தான் தெரியும். வாதி, பிரதிவாதி குடும்பத்தில் ஏற்பட்ட ஆவணங்கள் தொடர்பாக நான் ஏதேனும் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி, பிரதிவாதிகளுக்கு பாகபிரிவினை ஏற்கனவே ஆகிவிட்டது என்றும், 2ம் பிரதிவாதி மீதுள்ள விரோதத்தின் காரணமாக இன்னும் பாகபிரிவினை ஆகவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு என் அக்காவை திருமணம் செய்து இருப்பதாலும் 2ம் பிரதிவாதிக்கு நெருங்கிய சொந்தம் என்பதாலும் அவர்களுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி, பிரதிவாதிகள் இருவருக்கும் நான் உறவினர் தான்.

5. வாதிகளே வழக்கு தாக்கல் செய்ய விரும்பவில்லை என்றும் தாக்கல் செய்த பிறகு வழக்கை நடத்த முன் வரவில்லை என்றும் நான் தான் வாதிகளை கட்டாயப்படுத்தி வழக்கை நடத்திக் கொண்டு இருக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி மேலுள்ள விரோதத்தின் காரணமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u> இல்லை.**